# சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

## (இனம் - 22)

01. அங்காடிகள் சந்தை மற்றும் திருவிழாக்கள் ஊராட்சிகளின் ஆட்சி பகுதியில் இருந்ததென்பதை தன்னுரிமையுடைய உள்ளாட்சிகளின் வளர்ச்சியின் சரித்திரப் பின்னணி என்ற அத்தியாத்தின் மூலமாக அறிய முடிகிறது. சுதந்திரத்திற்கு பிந்திய கால கட்டத்தில் சிறப்பங்காடிகள், பொருளங்காடிகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் வளர்ந்தன. இதன் பின்னணியில் உள்ளாட்சிகளின் பங்கானது அங்காடிகளைத் திறப்பது மற்றும் பராமரிப்பதுடன் நிறுத்தப்பட்டது. இப்பகுதியில். உள்ளாட்சிகளுக்கு அதிகார ஒப்படைப்பு சம்பந்தமாக சொல்வதற்கு முன்னதாக அங்காடிகள் மற்றும் சந்தை குறித்து விளக்குவோம்.

### 1. அங்காடி

02. ஒவ்வொரு ஊரிலும் ஏதோ ஒரு வகையான அங்காடி இயங்கும். அதில் காய்கறி, பழங்கள், மளிகைப்பொருள்கள், ஆட்டிறைச்சி மற்றும் இதர பொருட்கள் விறகப்படும். பொதுவாக அங்காடிகள் வாரத்திற்கு ஒரு முறை இயங்கும். ஆனால் சில சமயங்களில் வாரம் இருமுறையோ அல்லது அன்றாடமோ கூட நடைபெறுகிறது. எது எப்படியிருந்தாலும், வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் வசதிகள் குறைவாகவே இருக்கும். மக்கள் தரையில் கடை பரப்பி அமர்ந்திருப்பார்கள். அவர்கள் வெய்யிலிலும், மழையிலும் அவதிப்படுவர். அந்த இடம் பெரும்பாலும் தூய்மையின்றி இருக்கும். சாலைகளின் ஓரம், சாலைகளின் சந்திப்பு மற்றும் அவை போன்ற பிற இடங்களே அங்காடிகள் நடத்தப் பயன்படும் இடங்களாகும். சில கிராமங்களில் கால்நடை மற்றும் கோழிகள் விற்கும் காலமுறைச் சந்தைகள் நடத்தப்படுகின்றன. இம்மாதிரி சந்தைகள் திறந்த வெளி நிலங்களில் வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் குறைந்த வசதியுடன் இயங்குகின்றன

03. எனவே வாங்குபவர்களுக்கும் – விற்பவர்களுக்கும் நல்ல வசதியுடன் கூடிய ஏற்ற இடங்களை ஏற்பாடு செய்வது ஊராட்சிகளின் கடமையாகும். வெயில், மழை மற்றும் காற்று ஆகியவற்றிலிருந்து போதிய அளவில் பாதுகாத்து அங்காடிகளை சுத்தமாக வைக்க வேண்டும். விற்பனையாளர்கள் இந்த வசதிகளுக்காகக் கட்டணம் செலுத்த வேண்டும். எனவே, இந்நன்மையானது இருசாரருக்கும் இலாபகரமானதாக இருக்கும். உள்ளாட்சிகளுக்கு கட்டணமும். விற்பவர்களுக்கு வசதிகளும் கிடைக்கும். எனவே உள்ளாட்சிகள், விற்பனை வாய்ப்புள்ள இடங்களில் புதிய அங்காடிகளைத் தொடங்குவதோடு அல்லாமல் தற்போதுள்ள அங்காடிகளை மேம்படுத்தி பராமரிக்க வேண்டும்.

04. இதுபோன்று எந்த சந்தையும் இல்லாத ஊராட்சிகளும் இருக்கலாம். இதற்கு, அந்த ஊரில் ஒரு சந்தைக்கான தேவை ஏதும் இல்லை என்பது பொருளல்ல. இது, மக்கள் தங்கள் கிராமத்தில் கடை எதுவும் இல்லாததால் அன்மையில் உள்ள ஒரு சந்தைக்கு செல்வதையே காட்டுகிறது. பொதுவான மக்கள் தொகை வளர்ச்சிக்கும் ஊரின் வளமைக்கும் ஊருக்கொரு சந்தை அவசியமாகிறது. இத்தகைய ஊர்களில் புதிய சந்தைகளைத் தொடங்குதல் ஊராட்சியினுடைய பொறுப்பில் இருக்க வேண்டும். இது முதலில் ஆதாயமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாளடைவில் இது நிச்சயம் ஆதாயமானதாக இருக்கும். ஊரில் ஒரு ஒழுங்குப்படுத்தப்பட்ட அல்லது கூட்டுறவு சந்தை இருக்கலாம் இந்த விதமான இடங்களில் ஊராட்சிகளின் பங்கு குறைவாக இருக்கிறது. ஊராட்சிகள் சிறப்பான சந்தைகள் வளர்ச்சியினை எளிதாக்கும் முகமையாகும். கிராம சந்தையை பொருத்தவரை, சந்தைகளை ஏற்படுத்தவும் அவற்றை பராமரிக்கவும் இதன் காரணமாக அவற்றிலிருந்து வருவாய் பெறுதற்கும் உரிய அதிகாரமானது ஊராட்சியினுடையதாகும். எனவே, ஊராட்சி ஒன்றியம் இத்தகைய சந்தைகள் ஆரம்பிப்பதும் பராமரிப்பதும் ஊராட்சி சந்தைகளுக்கு இணையனதாக இருக்கும். 1.4.1991 நிலவரப்படி, 1992ன் ஊரக வளர்ச்சி இயக்குநர் மதிப்பீடு படி தமிழ்நாட்டில் 1166 கிராமச் சந்தைகள் இருப்பதையும் மக்களின் வளர்ந்து வரும் தேவையை நிறைவு செய்ய மேலும் 1133 கிராம சந்தைகள் தேவைப்படுகின்றன என்பதையும் தெரிவிக்கிறது.

கூட்டுறவு சந்தைகள்

05. தஞ்சாவூர், திருவாரூர் பன்னீர் செல்வம், நாகப்பட்டினம் காயிதே மில்லத், நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலம் முழுவதும் தமிழ்நாடு கூட்டுறவு அங்காடி இணையத்துடன் இணைக்கப்பட்ட 113 தொடக்க நிலை கூட்டுறவு அங்காடி சங்கங்கள் இருக்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு சந்தை இணையம், பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், கொத்த மல்லி, உளுந்து முதலிய வேளாண் உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்கிறது. தமிழ்நாட்டில் தேசீய வேளாண்மை கூட்டுறவு சந்தைகள் இணையத்தின் வரையறுக்கப்பட்ட செயல்பாட்டிற்கு துணை புரியும் ஒரு முகவராக இது செயல்படுகிறது. கூட்டுறவு அங்காடி சங்கங்கள் வேளாண்மை உறுப்பினர்கள் வேளாண் பொருட்கள் நியாயமான விலையில் விற்பனை செய்ய உதவுகிறது. 1995 – 96 ல் ரூ. 728.98 கோடி மதிப்புள்ள வேளாண் விளை பொருள் விற்பனையானதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு அங்காடி சங்கங்களின் பங்குகளில் ஒன்று விற்பனையுடன் கடனை இணைப்பது. இந்த சங்கங்களின் பங்குகளில் ஒன்று விற்பனையுடன் கடனை இணைப்பது. இந்த சங்கங்கள் விவசாய உறுப்பினர்கள் நியாயமான விலை பெறுவதற்கு வேளாண் விளை பொருட்களுக்கு அடமானக் கடனுக்கும் ஏற்பாடு செய்கிறது. 1994–95ல் ரூ. 698.82 இலட்சங்கள் கடனாக தரப்பட்டிருந்தது. இந்த சநதைகளில் கையாளும் பொருட்களின் அளவு உயர்ந்து கொண்டிருக்கிறது. (1992 – 93ல் 38948 மெ. டன்னாக இருந்தது 1994 – 95ல் 61,022 மெ. டன்னானது).

வேளாண் சந்தை

06. வேளாண்மை விற்பனைத் துறையானது, உழவர்களின் விளை பொருட்களை உரிமம் பெற்றவர்களிடம் சரியான எடையில் செய்யவும், விற்ற பொருட்களுக்கு உடன் நல்ல பணம் கிடைக்கவும் உதவி புரிந்து வருகிறது. இதன் மூலம் உழவர்கள், இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக 1987 ஆம் ஆண்டைய "தமிழ்நாடு வேளாண்மை விற்பனை ஒழுங்குபடுத்துதல் சட்டம்" எனும் ஒரு சட்டத்தை அரசு இயற்றியது. இதன்படி, அனைத்து விற்பனை குழுக்களிலும் வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டு விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் முறையான வியாபாரம் நடைபெற வழி வகுக்கப்பட்டுள்ளது. கீழ்காணும் திட்டங்களை வேளாண் விளைபொருள் விற்பனை துறைய செயல்படுத்துகிறது.

1. ஒழுங்கு முறை விற்பனை கூடங்களைத் தொடங்கி பராமரித்து வருதல்.

2. பணம் தேவைப்படும் உழவர்களுக்கு "அடகுக்கடன்" வசதி செய்து தருதல்.

3. வேளாண் மற்றும் தோட்டப் பொருள்களுக்கு அக்மார்க் தரம் வழங்குதல்

4. வேளாண் பொருட்களை வணிக முறைத் தரம்பிரித்து வழங்குதல்.

07. மேற்படி பணிகளை செய்யும் பொருட்டு மாவட்ட அளவில் விற்பனைக் குழுக்கள் உள்ளன. அவ்விற்பனைக் குழுக்கள் கட்டுப்பாட்டில் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 44 சோதனைச் சாவடிகள், 96 வணிக முறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் 1 புகையிலை தரம் பிரிப்பு மையம் ஆகியவை இயங்கி வருகின்றன. இவ்விற்பனைக் கூடங்களுக்கான வரத்து 1991 – 92 ஆம் ஆண்டு 4.68 இலட்சம் டன்னிலிருந்து 1995 – 96ல் 8.67 இலட்சம் டன்னாக உயர்ந்தது. வசூலிக்கப்படும் 1 விழுக்காடு அங்காடிக் கட்டணமானது விற்பனைக் கூடங்களிள் வசதியை மேம்படுத்த உதவுகிறது.

## 2. சந்தையும், திருவிழாக் கடைகளும்

08. பொதுவாக ஒவ்வொரு ஊராட்சியிலும் பலதரப்பட்ட சமூக மற்றும் சமய சார்புடைய விழாக் காட்சிக் கடைகளும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. ஊராட்சிகள், அடிப்படை வசதிகளாகிய நீர், சுகாதாரம், மின்சாரம் மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றைச் செய்து தருவதின் மூலம் விழாக்காட்சி கடைகளை நடைமுறை படுத்த வேண்டும். மேற்படி வசதிகளை பொதுமக்களுக்கு செய்து தருவதற்காக ஊராட்சிகள், சந்தை மற்றும்

விழாக்கள் நடத்துவதை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். விழாக் காட்சிக் கடைகளும் திருவிழாக்களும் நடத்த பின்பற்றப்படும் பண்பாட்டிற்கு ஊராட்சிகள் இடையூறு ஏற்படுத்தக் கூடாது. மாவட்ட ஊராட்சிகள் மேற்படி விழாக்களுக்கு பின்பற்றப்படும் தொன்று தொட்டு வரும் பண்பாட்டினை ஆவணப்படுத்த வேண்டும். இவ்விழாக்காலங்களில் பல ஊர்களிலிருந்து அதிக மக்கள் கூடுவார்கள். பெரும் எண்ணிக்கையிலான வணிகர்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய வருவர். வணிகர்கள் தங்கள் கடைகளை திறப்பர். பலதரப்பட்ட திண்பண்டக் கடைகள், காபி மற்றும் தேனீர் கடை இயங்கும். ஏதாவது ஒரு வகையில் கட்டுப்பாடு இல்லையெனில் பல பிரச்சனைகள் எழும். வியாபாரிகள் எந்த ஒரு ஒழுங்கையும் கடைப்பிடிக்காமல் ஆங்காங்கே கடையை திறப்பார்கள். மக்கள் கிடைக்குமிடங்களிளெல்லாம் சுகாதாா கேடு விளைவிப்பர். விற்கப்படும் உணவு பொருட்கள் சுத்தமின்றி இருக்கும். இதனால் அபாயகரமான தொற்று நோய்கள் பரவும். இதுபோன்ற நிலைகளில் நல்ல தரமான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு உடல் நலக்கேடு மற்றும் சுத்தமின்மை தவிர்க்க முடியதாதாகி விடும். எனவே எல்லா மக்களும் மகிழ்ச்சியுடன் சந்தை மற்றும் விழாக்களில் கலந்து கொள்ளும் வகையில் இது போன்ற விரும்பத்தகாத விளைவுகளை வருமுன் தடுக்க தேவையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

## சட்ட ஏற்பாடுகள்

09. அங்காடி மற்றும் சந்தைகளைப் பொறுத்த வரையில உள்ளாட்சி நிறுவனங்களின் பணி, அதிகாரம், பொறுப்பு ஆகியவை பற்றி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பொருட்கள் பற்றிய பிரிவுகள் விபரம் வருமாறு :–

1. பிரிவு 111 கிராமப் பஞ்சாயத்துக்கள், பொது அங்காடி மற்றும் சந்தைகள் தொடங்குவது, பராமரிப்பு மற்றும் திருவிழாக்கள் தொடர்பான கட்டுப்பாடு குறித்து விளக்குகிறது.

2. பிரிவு 112 (ஜி) மற்றும் (ஜெ) ஊராட்சிக்குத் தொடர்புடைய பொது அங்காடி தொடங்குவது பற்றி விளக்குகிறது.

3. பிரிவு 147 (1) மற்றும் (2) பொது அங்காடி தொடங்க இடம் மற்றும் முற்றம் வழங்குதல் மற்றும் கட்டணம் வசூலித்தல் பற்றி விளக்குகிறது.

4. பிரிவு 148 (1) 150, 151 தனி அங்காடிகளுக்கு உரிமம் வழங்குவது மற்றும் ரத்து செய்யும் அதிகாரம் பெற்று விளங்குகிறது.

5. பிரிவு 148 (2) (4) மற்றும் (5) வாடகை கட்டணங்கள் மற்றும் உரிமம் வழங்க வரையறைகள் செய்தல் மற்றும் கட்டணங்கள் நீக்கம் பற்றி விளங்குகிறது.

6. பிரிவு 149 தனியார் அங்காடிகளின் தகராறுகள் மற்றும் உரிமம் தொடர்பில் அரசின் அதிகாரம்.

7. விதி 153 (1) (2) தனியார் நிலங்களை கையகப்படுத்தி அதற்குரிய இழப்பீட்டுத் தொகையினை உரிமையாளருக்கு வழங்குவதற்கும் அந்த இடங்களில் பொது அங்காடிகள் திறப்பதற்கும் உள்ள அதிகாரம் பற்றி இவ்விதி விளக்குகிறது.

8. விதி 154 (எ) மற்றும் (பி) தங்குவதற்கு மற்றும் பொருள்கள் இறக்குவதற்கு இடம் ஒதுக்குதல் மற்றும் வண்டிகள் நிறுத்துமிடம் முதலியவைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் சில இடங்களைப் பயன்படுத்தத் தடை செய்தல் பற்றி விளக்குகிறது.

9. விதி 186 மற்றும் 187 கட்டணம் மற்றும் வரவு சம்பந்தமாக விளக்குகிறது.

10. விதி 224 எடை கற்கள் மற்றும் அளவைகளை சோதனையிடுவது பற்றி விளக்குகிறது.

11. விதி 245 சட்டத்தை மீறுபவர்கள் மீது விதிக்கப்படும் தண்டங்கள் குறித்து விளக்குகிறது.

10. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றுக்கு வழங்க பரிந்துரைக்கப்படும் அதிகாரங்கள் வருமாறு :

I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. அங்காடிகள் நடத்துவதற்கு உரிய இடங்களை தேர்வு செய்தல் | 1. அங்காடிகள் மற்றும் சந்தைகள் நடத்துவதற்கு நடத்துவதற்கு உரிய இடங்களை தேர்வு செய்தல் மற்றும் அங்காடிகள் கட்டுதல். |
| | 2. பொது அங்காடிகளை திறந்து மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல். |
| | 3. அங்காடி வளாகங்கள், ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் ஆகிய வற்றை மேம்படுத்துதல். |
| 2. சந்தைகள் மற்றும் விழாக்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்தல் | 1. பிற அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்க கூடியதென குறிப்பாக அறிவிக்கை செய்யப்பட்ட சந்தைகள் மற்றும் திருவிழாக்கள் நீங்கலான அனைத்து அங்காடி மற்றும் சந்தைகளை கட்டுப் பாட்டில் வைத்திருத்தல். |
| 3. முறைப்படுத்தல், கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் கண்காணித்தல், மற்றும் கட்டணங்கள் | 1. கடைகள், அங்காடிகள் மற்றும் திருவிழாக் கடைகள், திருவிழாக்கள் நடத்துவதற்குரிய உரிமம் வழங்குவதற்குரிய வரையறைகள் விதித்தல். வரையறை மீறல் காரணமாக உரிமத்தினை ரத்து செய்யும் ஆணை. |
| | 2. அங்காடிகள் நடத்துவதற்குரிய முகவர், மற்றும் இடைத்தரகர்களுக்கான உரிமம் வழங்குதல். |
| | 3. கீழ்காணும் இனங்களுக்கான கட்டணங்கள் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல். |
| | அ. ஊராட்சியில் பொது அங்காடிகளை நடத்துவதற்கு. |
| | ஆ. கடைகள் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஆகியவை உபயோகிக்க. |
| | இ. கால்நடை, கோழி, விலங்கு மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் விற்பனை செய்ய. |

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு | |
|---|---|---|---|
| | | 4. | கீழ்காணும் சட்ட மீறல்களுக்கு தண்டனை வழங்கவும், அபராதம் விதிக்கவும் வகை செய்யப் பட்டுள்ளது. அதாவது உரிமம்பெறாமல் கடைகள் திறப்பது. பொருட்கள் / ஆடு, மாடுகள் விற்பது, அனுமதி பெறாமல் அங்காடி மற்றும் சந்தைகள் நடத்துவது. |

I. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு | |
|---|---|---|---|
| 1. | அங்காடிகள் நடத்துவதற்கு உரிய இடங்களை தேர்வு செய்தல் மற்றும் மேம்படுத்தல் | 1. | கிராம பஞ்சாயத்தின் ஒப்புதலுடன் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் மற்றும் சந்தைகள் நடத்துவதற்குரிய இடங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் அதனை அறிவிக்கைப் செய்தல். |
| | | 2. | ஊராட்சி ஒன்றிய பொது அங்காடிகளை திறப்பது, மேம்படுத்துவது மற்றும் பராமரிப்பது. |
| 2. | சந்தைகள் மற்றும் விழாக்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்து கண்காணித்தல் | 1. | அங்காடிகள் நடத்துவதற்குரிய உரிமம் வழவங்குவதற்கு சட்ட திட்டங்களை தயாரித்தல் மற்றும் வரையறை மீறல் காரணமாக உரிமத்தினை ரத்து செய்தல் |
| | | 2. | தனியார் அங்காடிகள் நடத்துவதற்கு முகவர் மற்றும் இடைத் தரகர்களுக்கும் உரிமம் வழங்குதல். |
| | | 3. | கீழ்க்காணும் இனங்களில் ஊராட்சி ஒன்றிய அங்காடிகளுக்கு கட்டணங்கள் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல்.<br>அ. பொருட்களை விற்பனைக்கு விளம்பரப் படுத்த.<br>ஆ. கடைகள், வாகனம் நிறுத்துமிடம் பயன்படுத்த.<br>இ. கால்நடை, கோழி மற்றும் பொருட்கள் விற்பனை செய்ய. |
| | | 4. | சட்ட மீறல்களுக்காக தண்டம் விதித்தல் மற்றும் தண்டம் வசூலித்தல், அதாவது உரிமம் இல்லாமல் கடை திறப்பது அனுமதி இல்லாமல் பொருட்களை மற்றும் விலங்குகளை விற்பனை செய்தல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | 5. பொருள்களை நியாய விலைக்கு விற்பதையும் பொருட்களின் தரத்தை பராமரிப்பதையும் நடைமுறைப்படுத்தல். |
| 3. சந்தை மற்றும் விழாக்கள் | 1. முக்கிய இடங்களில் சந்தை மற்றும் விழாக்கள் நடத்துதல் |
| | 2. ஊராட்சி ஒன்றிய சந்தைகள் மற்றும் விழாக்களை ஒழுங்குபடுத்திநடத்துதல், கட்டணங்கள் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல். |
| | 3. நடைமுறைகளுக்கான விதிமுறைகளை வரைதல், விதிமுறை மீறல்களுக்கான அபராதத்தை நிர்ணயித்து வசூலித்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 4. அங்காடிகள் நடத்துவதற்கு இடங்களை தேர்வு செய்தல் மற்றும் அங்காடி கட்டுதல் | 1. உள்ளூர் அங்காடிகள் மேம்பாட்டினை ஆய்வு செய்தல், முன்னேற்றத்திற்கான வழிவகைகயை ஆய்தல் மற்றும் கருத்துரு ஆய்வு முடிவுகளை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு தெரிவுபடுத்துதல் |
| | 2. மாவட்டத்திலுள்ள கிராமம் மற்றும் நகர்ப் புறங்களில் உள்ள அங்காடிகளை இணைக்கும் வகையில் மாவட்ட திட்டமிடும் குழுவினை ஏற்பாடு செய்தல். |
| | 3. அடிப்படை வசதிகள் முறையே குடிநீர், கழிவு நீர், கட்டிடம் ஆகியவை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல். |
| | 4. உரிமம் வழங்குவதற்குரிய சட்ட திட்டங்களுக்கு வேண்டிய ஆலோசனை வழங்குதல். |
| | 5. ஊராட்சி அங்காடி மற்றும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் எல்லை நிர்ணயிப்பதில் ஆலோசனை வழங்குதல் |
| | 6. புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் கூட்டுறவு விற்பனை அங்காடி ஆகியவை தொடங்க அரசுக்கு ஆலோசனை வழங்குதல் |
| 2. சந்தை மற்றும் விழாக்கள் | 1. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சந்தை மந்றும் விழாக்கள் பற்றி அறிக்கை வெளியிடுதல், அரசுக்கு ஆலோசனை வழங்குதல். மாநில அளவில் முக்கியத்துவம் வாய்ந்த அங்காடிகளை குறிப்பிட்டு அதனை திறம்பட நடத்துவது. |

## நிர்வாக மற்றும் சட்ட சிக்கல்கள்

11. மாநிலத் திட்டக்குழுவின் ஆலோசனைக் குழு இப்பணிக்காக எந்தவொரு பணியாளர்களையும் அரசு தரப்பிலிருந்து உள்ளாட்சிகளுக்கு மாற்றுவது அவசியம் இல்லை எனப் பரிந்துரைக்கிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994. மூன்று அடுக்குமுறை ஊராட்சி அமைப்புகளுக்கு போதிய அதிகாரம் மற்றும் சட்ட வடிவம் அளிக்கிறது. இச்சட்டம் பொது மற்றும் தனியார் அங்காடிமற்றும் சந்தை தொடங்கவும், நடத்தவும் உரிமம் வழங்குதல், உரிமம் ரத்து செய்வது என்பது குறித்து மூன்று நிலை உள்ளாட்சிகளுக்கும் தனித்தனியாக அதிகாரம் வழங்குகிறது. மேலும் இச்சட்டம் உரிமம் ரத்து செய்தல், அபாரதம் விதித்தல் குறித்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே அங்காடிமற்றம் சந்தைகள் சம்பந்தமாக எந்தவொரு சட்ட மாற்றமோ அல்லது திருத்தமோ அவசியமில்லை. இருப்பினும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் ஆகியவை பட்டியலிட்டு (ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சிகளின் ஆலோசனையின் பேரில்) அரசுக்கு அனுப்பி அதனை வெளியிடுவதற்கு தகுதியுள்ள அதிகாரி அல்லது மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதுபோன்று ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் மற்றும் சந்தைகள் பட்டியலிட்டு அறிவிப்பு வழங்க தகுதியுள்ள அதிகாரி வசம் ஒப்படைக்க வேண்டும். இந்த அறிவிப்பு அங்காடிகளை / சந்தைகளை எவ்வாறு திறம்பட மாவட்ட ஊராட்சி நடத்தலாம் என்பதனையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இயக்குநர், வேளாண்மை விற்பனைத்துறை நடத்தும் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் "மேலாண்மைக் குழு' வில் அந்த எல்லைக்குட்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களை பதவி காரணமான உறுப்பினராக நியமிக்கலாம். மாவட்ட அளவில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் "மேலாண்மைக் குழு" வில் மாவட்ட ஊராட்சி தலைவரை பதவி காரணமாக உறுப்பினராக நியமிக்கலாம். இதற்காக தமிழ்நாடு வேளாண் உற்பத்தி (ஒழுங்குமுறை மற்றும் விற்பனை) சட்டத்தினை திருத்தலாம்.

## நிதிச் சிக்கல்கள்

12. சந்தை மற்றும் விழாக்கள் நடத்துவதற்கு, புதிய பொது அங்காடிகளைத் தொடங்குவதற்கும் ஏற்கெனவே உள்ள அங்காடிகளைப் பராமரிப்பதற்கும், ஊராட்சி நிறுவனங்களால் வசூலிக்கப்படும் கட்டணம் மட்டும் போதுமானதாக இருக்காது. அரசு நிதி உதவி அளித்தால் அதில் உள்ளாட்சி நிறுவனங்களுள் நிதி ஆதாரம் பெறும். ஆனால் கட்டணங்கள் விகிதத்தினை உயர்த்தி அதிகப்படியான நிதி ஆதாரங்களை பெருக்குதல் உரிய நடவடிக்கையாக இருக்கும். அங்காடிக் குழுக்கள் (மார்கடிங் கமிட்டி) மற்றுமொரு நிலையான நிதி ஆதாரமாகும். அங்காடி குழுக்கள் அதிகப்படியான நிதி ஆதாரங்கள் உள்ளனவாக உள்ளன. அதனை உரிய முறையில் பயன்படுத்தி தற்போதுள்ள அங்காடிகளின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றவும் புதிய அங்காடிகள் துவங்கவும் செய்யலாம். உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட அங்காடி குழுக்கள் இடையே பேச்சுவார்த்தை நடத்தி அங்காடிகளை வளப்படுத்துவதில் மாவட்ட ஊராட்சிகள் சிறப்பாக பணியாற்ற முடியும்.